[2017 ஜூலை 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

192—

புதிய மின்மாற்றி

***7104—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் நகராட்சி, சட்டமங்கலம் ஸ்ரீகணபதி நகரில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகர் நகராட்சி, சட்டமங்கலம் ஸ்ரீகணபதி நகரில் குறைந்த மின்னழுத்தம் இருப்பது கண்டறியப்பட்டதால், ஏற்கெனவே இருக்கின்ற ஒரு 100 கே.வி.ஏ. மின்மாற்றியுடன், கூடுதலாக ஒரு புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி மாற்றப்பட்டு, அங்கே சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

முற்பகல் 10—10

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைரவிழா நாயகர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களின் செயல் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்

2017 ஜூலை 13]

அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். செங்கல்பட்டு தொகுதியில் உள்ள மறைமலை நகராட்சியில் 21 வார்டுகள் உள்ளன. இங்கு சுமார் 80 ஆயிரம் பொது மக்கள் வசிக்கின்றார்கள். இங்கே அதிக அளவில் தொழிற்சாலைகளும், பன்னாட்டு நிறுவனங்களும், பல சிறு சிறு நிறுவனங்களும் உள்ளதால், மக்கள் தொகை பெருக்கம் அதிக அளவில் உள்ளது. இதனால், பொது மக்கள் புதிய வீடுகள் கட்டுவதும் அதிகரித்துள்ளது. மறைமலைநகர் நகராட்சி, 18–வது வார்டிலுள்ள கொருக்கந்தாங்கல், 9–வது வார்டிலுள்ள கூடலூர், வடக்கு ஆலவட்டம்மன் கோயில் தெரு, 10–வது வார்டிலுள்ள மலைமேடு காலனி, 11–வது வார்டிலுள்ள சின்ன செங்குன்றம், 12–வது வார்டிலுள்ள கீழக்கரணை, சித்தமனூர், செங்குன்றம், 13–வது வார்டிலுள்ள திருக்கச்சூர் ஈஸ்வரன் கோயிலின் பின்புறம் உள்ள பகுதி மக்களுக்குக் குறைவான மின்னழுத்தத்தில் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

நான் குறிப்பிட்ட மறைமலைநகர் நகராட்சியில், 15–வது வார்டிலுள்ள கணபதிபுரம், இந்தியா பிஸ்டன், சிந்தாமணி நகர், முருகன் நகர், கணபதி நகர், கணபதி நகர் விரிவு–1, 2 ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்தப் பகுதிகளில் உள்ள 500 வீடுகளுக்குக் குறைந்த மின்னழுத்தத்தில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் வீடுகளிலுள்ள மின் சாதனப் பொருட்கள் சேதமடைகின்றன. அதனால், மறைமலைநகர் நகராட்சி, சட்டமங்கலம் கிராமத்திலுள்ள கணபதி நகரில், கடந்த 2 மாதத்திற்கு முன்பு அமைக்கப்பட்டுள்ள மின்மாற்றிமூலம், கணபதிபுரத்திற்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படுகிறது. மேலும், அதைச் சுற்றியுள்ள இந்தியா பிஸ்டன், சிந்தாமணி நகர், முருகன் நகர், கணபதி நகர் விரிவு 1, 2 ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களும் பயன்பெறும் வகையில், ஒரே சீரான மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், மேற்குறிப்பிட்ட பகுதிகளிலும் புதியதாக மின்மாற்றி அமைத்துத் தர வேண்டுமென்றும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமங்கலம்

ஸ்ரீகணபதி நகரில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். இப்போது சிந்தாமணி நகருக்கும், மற்றப் பகுதிகளுக்கும் கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே கணபதி நகரில் குறைந்த மின்னழுத்தம் இருந்த காரணத்தினாலேதான், 24–7–2017 அன்று புதியதாக ஒரு மின்மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற பகுதிகளில், மின்னழுத்தம் குறைவாக இருப்பதை அரசு அதிகாரிகளின் மூலமாக ஆய்வு செய்து, அதை உடனடியாக நிறைவேற்றித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, கூடுவாஞ்சேரி பேரூராட்சி, 3–வது வார்டிலுள்ள புதுப்பாளையத்தம்மன் கோயில் தெரு, 5–வது வார்டிலுள்ள தேரடி தெரு, 6–வது வார்டிலுள்ள கிருஷ்ணாபுரம், 10–வது வார்டிலுள்ள காந்தி நகர் போன்ற பகுதிகளிலும் குறைவான மின்னழுத்தத்தில் வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய பகுதிகளிலும் புதிய மின்மாற்றி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கூடுவாஞ்சேரி பகுதியில் மின்னழுத்தம் குறைவாக இருக்கிறதென்று சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே இருக்கின்ற வீடுகளுக்கெல்லாம் குறைவான மின்னழுத்தம் இல்லாமல் இப்பொழுது மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒன்றரை இலட்சம் வீடுகள் புதிதாகக் கட்டப்பட்டிருக்கின்றன. ஒன்றரை இலட்சம் வீடுகளுக்கும் நாம் மின் இணைப்பைக் கொடுத்திருக்கின்றோம். அவ்வாறு மின் இணைப்பைக்

2017 ஜூலை 13]

கொடுக்கின்றபோது, transformer அமைப்பதற்கு Apartments கட்டுகிறவர்கள் இடம் கொடுக்க மறுக்கிறார்கள். அவ்வாறு இடம் கொடுக்க மறுக்கின்ற காரணத்தினால்தான், அவர்களுக்குப் புதியதாக transformer வைக்க முடியாமல் போகின்றது. அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற மக்கள் 10 மாடி அளவிற்கு வீடுகள் கட்டுகிறார்கள். ஆனால், மின்சார வாரியத்தின்மூலம் transformer வைப்பதற்கு இடம் கொடுக்க மறுக்கின்ற காரணத்தினால்தான், இதுபோன்ற பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. எனவே, இடத்தைக் கண்டறிந்து, புதிதாக மின்மாற்றி அமைக்க காலதாமதம் ஏற்படுவதற்கு இதுதான் காரணம். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கூடுவாஞ்சேரி பகுதியைச் சார்ந்தவராக இருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோது, மழைக் காலங்களில் அங்கே நான் 15, 20 நாட்கள் நிவாரணப் பணிகளை மேற்கொண்டிருக்கின்றேன். அந்த இடத்தைப்பற்றி முழுவதும் தெரிந்த காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியில் ஆய்வு செய்து, புதிய மின்மாற்றிகள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கணபதி நகர் மற்றும் சிந்தாமணி நகருக்கெல்லாம் 100 KVA மின்மாற்றி இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.*

திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் சட்டமன்றத் தொகுதி, போளூர் ஒன்றியம், திருசூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், போளூர் தொகுதி, திருசூர் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இப்பொழுது மாண்புமிகு*

முதல்வர் அவர்கள் 129 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார்கள். திருசூர் பகுதியிலே இருக்கின்ற மின்னழுத்தத்தை ஆய்வு செய்து, தேவையிருப்பின், மாண்புமிகு முதல்வர் அறிவித்திருக்கிற துணை மின் நிலையங்களிலிருந்து ஒன்றைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தைக் கொடுக்கும்பட்சத்தில், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

193—

ஊராட்சி ஒன்றியச் சாலை

***3039—திரு. கே. பழனி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை முதல் ஒரத்தூர் வழியாக நீலமங்கலம் வரை ஊராட்சி ஒன்றியச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், படப்பை முதல் ஒரத்தூர் வழியாக நீலமங்கலம் வரையிலான ஒன்றியச் சாலை அமைக்க ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்த் திட்டத்தின்கீழ், 3 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.